1973 மார்ச் 20]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசு முயற்சிக்கலாம். ஆனால் அந்த இரகசியத்தைச் சொன்னால் அதற்குப் பின்னால் அது பலிக்காமல் போய் விடும் என்ற ஒரு நம்பிக்கை இருக்கிறது. ஒரு மருந்தின் பெயரை அல்லது மூலிகையின் பெயரைச் சொல்லிவிட்டால் அதற்குப் பிறகு அது பயன்படாது, ஆகவே நாங்கள் சொல்லமாட்டோம் என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். ரகசியங்களைத் தெரிந்த தாக மட்டும் சொல்லி பலபேர்களை நம்ப வைத்து ஏமாற்றுகிறவர் களும் இருக்கிறார்கள்.

ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்களுக்குச் சுற்றுச்சுவர்கள்

* 434 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியபாளையம் பிரதம சுகாதார நிலையக் கட்டடத்திற்கும், கும்முடிப்பூண்டி பிரதம சுகாதார நிலையக் கட்டடத்திற்கும் சுற்றுச் சுவர் (compound) கட்டுவதில் ஏற்படும் தாமதத்திற்கு காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தற்போதைய நிதி நிலை நெருக்கடியின் காரணமாக பெரியபாளையம், கும்முடிப்பூண்டி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் (compound wall) கட்ட இயலாது.

திரு. கா. வேழவேந்தன் : பல லட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டி முடித்து இந்த அரசு சிறப்பான பணிகளை நிறைவேற்றுகிறது. சுற்றுச் சுவர் கட்டாததால் அந்தக் கட்டடத்திற்குள்ளே யார் யாரோ நுழைகிறார்கள். ஆகவே இந்த நிலையைப் போக்க பேஸ்ட் ப்ரோக்ராம் ஒன்று போட்டு விரைவில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த வட்டாரத்தில் மருத்துவ மனை அமைக்கப்பட்டதே உறுப்பினர்களைப் போன்றவர்களின் செல்வாக்கை நம்பித்தான் மருத்துவமனைகள் கட்டுகிறோம்—யார் யாரோ நுழைகிறார்கள் என்றால் நம்முடைய செல்வாக்குக்குக் கட்டுப் படவில்லை என்றுதான் பொருள்.

மற்றொன்று; இந்தச் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு செலவாகக் கூடிய தொகையைக் கொண்டு வேறு சில கிராமங்களில் மருத்துவ மனைகள் கட்ட அதைப் பயன்படுத்தமுடியும். அடுத்து சுவராகக் கட்டுவதற்குப்

பதிலாக சவுக்கு மரங்கள் போன்றவற்றை வைத்து உயிர் வேலி அமைக்கக்கூடிய முறை இருக்கிறது சுவருக்குப் பதிலாக. அந்த முறையில் அமைக்கவேண்டுமென்று அரசு ஏற்கனவே அதிகாரி களுக்குத் தெரிவித்திருக்கிறது.

College by Madras Homoeopathy Development Association

* 135 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Madras Homoeopathy Development Association proposes to open a College in Madras this year; and

(*b*) if so, whether the sanction of the Government has been applied for?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இதைப்பற்றி அரசிடம் தகவல் எதுவும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: இப்போது இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரிகளில் ஹோமியோபதியையும் ஒரு பாடமாக கற்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அலோபதி மருத்துவத் துறை யில் உள்ளவர்கள் ஹோமியோபதி முறையை இன்னும்கூட ஏற்றுக் கொள்ளவில்லை. ஒருவர் இருவர்தான் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே அலோபதி மருத்துவத்துறையில் பாடம் நடைபெறுகிற இடத்தில் இதைச் சேர்த்து நடத்துவது என்பது இயலாது. தனியாகக் கல்லூரி ஏற்படுத்தி அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த அரசு முயற்சிக்கும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: நாடு முழுவதும் ஓமியோபதித் துறையில் மருத்துவம் செய்யக்கூடிய மருத்துவர்கள் பரவலாக இருக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு எவ்விதமான பயிற்சியும் கிடையாது. ஆகவே, இம்மாதிரி ஓமியோபதி கல்லூரி ஏற்படுத்தி ஓராண்டு, இரண்டாண்டு பயிற்சி பெற்று பிறகுதான் மருத்துவப் பணியில் ஈடுபட வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை அரசு கொண்டு வருமா?